ஸ்ரீ சிங்கரட்சக விநாயகர் துணை

"சமேஸ்த லோகா சுகினோ பவந்து"

நன்மைகள் நல்கிடும் நாகரம்மனே போற்றி



அருள்மிகு

# தியானேஸ்வரர்

சன்னிதியில்

## முதல் அன்னபிஷேக விழா

## அழைப்பிதழ்



அன்புடையீர்,

நிகழும் 2015ஆம் வருடம் அக்டோபர் திங்கள் 27ம் நாள் செவ்வாய்கிழமை, மாலை 4.30 மணியளவில் அருள்மிகு ஒடுப்பறை நாகரம்மன் கோவில் வளாகத்தில் அமைந்திருக்கும் தியான மண்டபத்தில், அருள்மிகு தியானேஷ்வரர் சன்னதியில் **முதலாவது அன்னபிஷேகம்** மற்றும் சிறப்பு பூஜைகள், பஜன், தியான வழிபாடுகள் சிறப்பாக நடைபெறவிருப்பதால் மேற்படி விழாவிற்கு சமுதாய நிர்வாகிகள், சமுதாயப் பெருமக்கள் மற்றும் பக்தகோடிகள் அனைவரும் தவறாது வருகை தந்து சிறப்பித்து இறையருள் பெற்றிட அன்புடன் அழைக்கிறோம்.

இவண்

விழா குழுவினர் சார்பில்


**C. விஜயகுமார்** MBA.,
நாகர்கோவில், செல்: 94434 26489

**S. ரவீந்திரன்**,
சென்னை, செல்: 98400 37713


இரணியல்
*01.10.2015*

"அனைவரும் வாரீர்!
அபிஷேகத்தில் பங்கு கொள்வீர்!
அருளாசி பெறுவீர்!"

"எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அல்லாமல்
வேறென்றும் அறியேன் பராபரமே"! - தாயுமானவர் சுவாமிகள்

**தியானேஸ்வரர் ஜெயந்தி நாள்: 07.05.2008**

## நிகழ்ச்சி நிரல்

**இடம்:** அருள்மிகு தியானேஸ்வரர், தியான மண்டபம்

**நேரம்:** மாலை 4.30 மணி

## அபிஷேக ஆராதனை

தலைமை : திரு. **A.K. குமார்**, தலைவர்,
ஸ்ரீ சி.ர.வி. தேவஸ்தானம், இரணியல்.

நடத்தி தருபவர் : திரு. **வில்லுக்குறி மகாதேவன்**

திருவிளக்கு தீபம் ஏற்றுதல் : திருமதி. **கலாவதி ரவீந்திரன்**

| அபிஷேகம் | துவக்கி வைப்பவர் |
|---|---|
| கங்கை நீர் அபிஷேகம் | திருமதி. **A. கவிதா விஜயகுமார்** |
| குமரி முக்கடல் புனிதநீர் அபிஷேகம் | திருமதி. **J. சீதா கோலப்பாபிள்ளை**<br>தலைவி - மகளிர் மன்றம், இரணியல். |
| மஞ்சள் நீர் அபிஷேகம் | திருமதி. **M. விஜயகுமாரி சுப்பிரமணியன்**,<br>ஏலூர் செட்டு சமுதாயம், திருவனந்தபுரம். |
| பன்னீர் அபிஷேகம் | திருமதி. **V. ஆனந்தம் நாகலிங்கம்**,<br>செட்டு சமுதாயம், பத்மனாபபுரம். |
| பால் அபிஷேகம் | திருமதி. **S. சரஸ்வதி நாராயணதாஸ்**,<br>செட்டு சமுதாயம், திருவிதாங்கோடு. |
| சந்தன அபிஷேகம் | திருமதி. **S. ஷீலா அண்ணாமலை பிள்ளை**,<br>மகளிர் மன்றம், இரணியல். |
| விபூதி அபிஷேகம் | திருமதி. **K. உமாபதி கிருஷ்ணகுமார்**,<br>மகளிர் மன்றம், இரணியல். |
| மலர் அபிஷேகம் | திருமதி. **C. உஷாபாய் சுப்பிரமணியம்**,<br>மகளிர் மன்றம், இரணியல். |
| அன்னம் பாலிப்பு | திருமதி. **G. சாந்தகுமாரி ஸ்ரீகுமார்**, M.A., M.Ed.,<br>(பணிநிறைவு, தலைமை ஆசிரியை,<br>அரசு உயர்நிலைப்பள்ளி, பேயன்குழி, குமரி மாவட்டம்) |

## நாமகீர்த்தனை, பஜனை,
## தியான வழிபாடு மற்றும் பஜனை பா மலர் வெளியீடு

இடம்: ஏழூர் செட்டு சங்க அரங்கம்,
நாகரம்மன் கோயில் வளாகம், ஒடுப்பறை

நேரம்:
மாலை 5.00 மணி

தலைமை : திரு. S. கோலப்பா பிள்ளை,
செயலாளர், ஸ்ரீ சி.ர.வி. தேவஸ்தானம், இரணியல்.

வரவேற்புரை : திரு. C. விஜயகுமார் MBA.,
உதவி தணிக்கை அலுவலர், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
திருநெல்வேலி மண்டலம்.

சிறப்பு விருந்தினர் : டாக்டர். திருக்குறள் கேசவ சுப்பையா அவர்கள்,
"*Star of Asia*", நாகர்கோவில்,
(நிறுவனத் தலைவர், திருமந்திரம் ஆய்வுக் கழகம்)

### பஜனை பாமலர் வெளியீடு

வெளியிடுபவர் : திரு. P. சிவதாணு B.E., M.Sc.,
தலைவர், ஏழூர் செட்டு சங்கம்.

பெறுபவர் : திரு. K. சுப்பிரமணியன்,
தலைவர், ஏலூர் செட்டு சங்கம், திருவனந்தபுரம்.

பாராட்டுரை : திரு. N. சிவசுப்பிரமணிய பிள்ளை,
பணிநிறைவு, தலைமை ஆசிரியர்

நன்றியுரை : திரு. S. ரவீந்திரன், சென்னை.

### தொடர்ந்து நாமகீர்த்தனை, பஜனை, பிரார்த்தனை மற்றும் தியான வழிபாடு நடைபெறும்

அன்னதானம் இரவு : 7.30 மணி

குறிப்பு: இரவு அன்னதானம் முடிந்தவுடன்
அருள்மிகு நாகரம்மன் கோவிலிலிருந்து இரணியலுக்கு வேன் வசதி உண்டு.

(நிகழ்ச்சி நிரல் மாறுதலுக்கு உட்பட்டது.)

**முக்தி என்பது**, செய்யும் கர்மத்தால் கிடைப்பதன்று, புத்தி கூர்மையால் கிடைப்பதன்று, பக்தி செய்வதால் கிடைப்பதன்று, கற்ற கல்வியினால் கிடைப்பதன்று, சேரும் செல்வத்தால் கிடைப்பதன்று, அடையும் புகழினால் கிடைப்பதன்று, பெற்றெடுத்த பிள்ளைகளால் கிடைப்பதன்று, உற்றார் உறவினர்களாலும் கிடைப்பதன்று, நட்புக்குரிய நண்பர்களாலும் கிடைப்பதன்று. **"பிரம்மமும் தானும் ஒன்றே"** என்னும் அத்வைத விழிப்புணர்வினால் கிடைப்பதாகும்.

# பரமாத்மன்



நான்

தாயற்றவன்
தந்தையற்றவன்
பிறப்பற்றவன்
இறப்பற்றவன்
உடலற்றவன்
உருவமற்றவன்
வடிவமற்றவன்
காண்பதற்கு அரியவன்
முக்காலங்களையும் கடந்தவன்
அணுவுக்கு அணுவானவன்
அண்டத்தில் பெரியவன்
காற்றானவன்
ஒளியானவன்
என்றைக்கும் நிலையானவன்



கண்கள் இல்லாமல் அனைத்தையும் காண்கிறேன்
காதுகள் இல்லாமல் அனைத்தையும் கேட்கிறேன்
கால்கள் இல்லாமல் எங்கும் செல்கிறேன்
கைகள் இல்லாமல் அனைத்தையும் இயக்குகிறேன்
தலை இல்லாமல் பூஜைகளை / அபிஷேகங்களை ஏற்கிறேன்
வாய் இல்லாமல் படையலை / வைவேத்தியங்களை உண்கிறேன்
தீபம் இல்லாமல் ஒளியாய் ஒளிர்கிறேன்

நான்

அன்பு வடிவானவன்
அறிவால் அறியப்படுபவன்
சகுணன் ஆயினும் நிர்குணன்
ஓங்கார ஒலியானவன்
உயிருக்கு உயிரானவன்
பஞ்ச பூதங்களாக நிலைகொண்டவன்
முக் காலங்களிலும் நிலையானவன்
அண்ட சராசரங்களிலும் நிறைந்தவன்
உலகத்தினரால் உணர்ந்து ஓதுதற்கரியவன்
அருட்பெருஞ் சோதியாய் விளங்குபவன்
தனிப்பெருங் கருணையே உருவானவன்



அனைத்து உயிர்களும் என்னிடமே தோன்றுகின்றன
அனைத்து உயிர்களும் என்னிடமே நிலை கொள்கின்றன
அனைத்து உயிர்களும் என்னிடமே ஒடுங்குகின்றன
அனைத்து உயிர்களிலும் நானே நிலை கொள்கிறேன்
என்பதை யார் அறிகிறார்களோ அவர்கள் என்னையே அடைகிறார்கள்

"பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மத்தை அடைகிறான்"